### ஹண்டா வைரஸ் பரவல்: 3 பேர் பலி!

# 2 இந்தியர்கள் உட்பட பலர் பாதிப்பு!

## சுகாதார மையம் எச்சரிக்கை!

தென்ஆப்ரிக்கா, மே 10-

தென் ஆப்ரிக்க நாடான அர்ஜென்டினாவில் இருந்து எம்.வி. ஹோண்டியஷ் என்ற உல்லாச சுற்றுலா கப்பல் ஆப்ரிக்காவில் கேப் நோக்கி பயணித்தது.

இந்தக் கப்பல் ஒரு மாதத்திற்கு முன்பு அர்ஜென்டினாவிலிருந்து புறப்பட்டு, பல்வேறு வனப்பகுதிகளில் நங்கூரமிட்டுச் சென்றபோது ஹண்டா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த வைரஸ் எலிகளில் இருந்து மனிதர்களுக்கு பரவக்கூடியதாகும்.

அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் கிழக்காசிய நாடுகளை சேர்ந்த 149 பயணிகள் இந்த கப்பலில் பயணித்தனர். மேலும் கப்பல் மாலுமிகளில் இருவர் இந்தியர்கள் ஆவர்....

இந்நிலையில் வைரஸ் பாதிப்பால் கப்பலில் பயணித்தவர்களில் இது வரை 3 பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் 8 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது..

பயண வழியிலேயே சிலர் தத்தமது நாடுகளுக்கு திரும்பிய நிலையில் அவர்கள் மூலம் வைரஸ் பலருக்கு பரவியிருக்க கூடும் என அஞ்சப்படுகிறது.

நெதர்லாந்தில் 3 பேர், சிங்கப்பூரில் 2 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சுவிட்சர்லாந்து, தென்னாப்பிரிக்கா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் தற்போது தீவிர கண்காணிப்பில் உள்ளன.

அடுத்த சில வாரங்களில் கூடுதல் வழக்குகள் பதிவாக வாய்ப்புள்ளதாக உலகச் சுகாதார மைய தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் எச்சரித்துள்ளார்.

கப்பலில் பயணித்த 2 இந்திய மாலுமிகளுக்கும் தொற்று கண்டறியப்பட்டது. அவர்களின் நிலைமை குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை.

கப்பல் தற்போது ஸ்பெயினின் கேனரி தீவுகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. மீதமுள்ள பயணிகள் அனைவரும் அவரவர் அறைகளிலேயே தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

# 2014க்குப் பிறகு பேரவைகளில் குறைந்த முஸ்லிம் எம்.எல்.ஏ.க்கள்!

புதுடெல்லி, மே 10 -

கடந்த 2014ம் ஆண்டு மத்தியில் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகு செல்வாக்கை அதிகரித்து வருகிறது. அதை சமாளிக்க முடியாமல், தேர்தலின் போது வேட்பாளர்களைத் தேர்வு செய்யும் போது எதிர்க்கட்சிகள் வேறுவகையான மாற்றங்களைச் செய்து வருகிறது.

குறிப்பாக மாநில சட்டப்பேரவைகளில் முஸ்லிம் எம்.எல்.ஏ.க்களின் எண்ணிக்கை 2013ம் ஆண்டு 339 ஆக இருந்தது. தற்போது அது 282 ஆக குறைந்துள்ளது.

உத்தர பிரதேசத்தில் சுமார் 25 சதவீத முஸ்லிம்கள் உள்ள சட்டப்பேரவையின் மொத்த உறுப்பினர்கள் 403. ஆனால், தற்போது 31 முஸ்லிம் எம்.எல்.ஏ.க்கள் மட்டுமே உள்ளனர். இதற்கு முன் உ.பி.யில் 63 முஸ்லிம் எம்.எல்.ஏ.க்கள் இருந்துள்ளனர். இதேபோல் பிஹாரில் 19ல் இருந்து 11, ராஜஸ்தானில் 11ல் இருந்து 6 ஆக முஸ்லிம் எம்.எல்.ஏ.க்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

அசாம், மேற்கு வங்க மாநிலங்களில் 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் முறையே 8 மற்றும் 9 முஸ்லிம் வேட்பாளர்களை பா.ஜ.க. நிறுத்தியது. ஆனால், அசாமில், அனைத்து முஸ்லிம் வேட்பாளர்களும் தோல்வியடைந்தனர். அதன்பின் கட்சியில் சிறுபான்மையினர் பிரிவையே பா.ஜ.க. கலைத்து விட்டது. இந்த முறை 2 மாநிலங்களிலும் ஆட்சி அமைத்த பா.ஜ.க. ஒரு முஸ்லிம் வேட்பாளரைக் கூட நிறுத்தவில்லை.

தேசிய அளவில் மணிப்பூரைச் சேர்ந்த அச்சப் உத்தின் மற்றும் திரிபுராவைச் சேர்ந்த தபஸ்ஸுல் ஹுசைன் ஆகிய 2 பேர் மட்டுமே பா.ஜ.க.வில் முஸ்லிம் எம்.எல்.ஏ.க்களாக உள்ளனர். முஸ்லிம் எண்ணிக்கைக்கும் மாநில சட்டப்பேரவைகளில் அதன் உறுப்பினர்களுக்குமான இடைவெளி மிகவும் அதிகமாக உள்ளது. மேற்கு வங்க மாநிலத்தில் சுமார் 30 சதவீதம் இருந்தும் சட்டப்பேரவையில் 12.6 சதவீத முஸ்லிம்கள் மட்டுமே உள்ளனர்.

பிஹாரில் 17 சதவீத முஸ்லிம்கள் இருந்தும் பேரவையில் 4.5 சதவீதம் மட்டுமே இடம் பெற்றுள்ளனர். மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகாவில் முஸ்லிம்கள் 10 சதவீதத்துக்கும் அதிகமானோர் உள்ளனர். ஆனால், சட்டப்பேரவைகளில் 3 முதல் 4 சதவீதம் மட்டுமே உள்ளனர்.

தேசிய அளவில் அதிகபட்சமாக சட்டப்பேரவைகளில் 61 முஸ்லிம் எம்எல்ஏ.க்களுடன் காங்கிரஸ் முதலிடம் வகிக்கிறது. இரண்டாவது இடத்தில் ஜம்முகாஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியில் 39 பேர் உள்ளனர். அடுத்தடுத்த நிலையில், திரிணமூல் காங்கிரஸ் 37 மற்றும் சமாஜ்வாதி 34 உறுப்பினர்களைக் கொண்டுள்ளன. கேரளாவில் மட்டும் வலுவான நிலையில் 26.56 சதவீத முஸ்லிம்களில் 25 சதவீதம் பேர் வென்றுள்ளனர். இவர்கள் ஆளும் காங்கிரஸ் 8, ஐயுஎம்எல் 22 எனவும், எதிர்க்கட்சி கூட்டணியில் சி.பி.எம். 4 மற்றும் சி.பி.ஐ. 1 என முஸ்லிம்கள் இடம் பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் தி.மு.க. 3, ஐயுஎம்எல் 2, த.வெ.க. மற்றும் காங்கிரஸ் தலா 1 முஸ்லிம்களை வைத்துள்ளன. புதுச்சேரியில் 6.05 சதவீத முஸ்லிம்கள் இருந்தும் அவர்களில் ஒருவர் கூட இடம்பெறவில்லை. மேற்கு வங்க மாநிலத்தில் 59 என்றிருந்த இவர்களின் எண்ணிக்கை தற்போது முடிந்த தேர்தலில் 37 எனக் குறைந்துள்ளது.

எனினும், இது பா.ஜ.க.வால் மட்டும் நிகழும் மாற்றமல்ல. நாடு முழுவதும் உள்ள அனைத்துக் கட்சிகளிலும் இதே நிலைமை தொடர்கிறது. பல மாநிலங்களில், சில கட்சிகள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்தி, மிகப் பெரிய தேர்தல் வெற்றிகளைப் பெற்றுள்ளன. இச்சூழல், எதிர்க்கட்சிகளைச் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை சமூகக் கட்டமைப்புகளுடன் சமநிலைப்படுத்த வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளியுள்ளது.

# இந்தியக் கடற்படையின் புதிய தளபதி நியமனம்!

புதுடெல்லி, மே 10 -

இந்தியக் கடற்படையின் அடுத்த தலைமைத் தளபதியாக வைஸ் அட்மிரல் கிருஷ்ணா சுவாமி நாதன் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது மும்பையில் உள்ள மேற்கு கடற்படை கமாண்டின் தலைமை அதிகாரியாகப் பணியாற்றி வரும் இவர், மே 31ஆம் தேதி முறைப்படி இப்பொறுப்பை ஏற்றுக்கொள்வார்.

தற்போதைய கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதி மே 30ஆம் தேதியுடன் ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து, அந்த இடத்திற்கு கிருஷ்ணா சுவாமி நாதன் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது பதவிக் காலம் டிசம்பர் 31, 2028 வரை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியக் கடற்படையில் இவர் ஆற்றிய சிறப்பான மற்றும் நீண்டகால சேவையைக் கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு இவருக்கு இந்த உயரிய பொறுப்பை வழங்கியுள்ளது.

இத்துடன் நாட்டின் ராணுவக் கட்டமைப்பில் மற்றொரு முக்கிய மாற்றமாக, லெப்டினன்ட் ஜெனரல் என்.எஸ். ராஜா சுப்ரமணி (ஓய்வு) புதிய பாதுகாப்புப் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ராணுவ விவகாரங்கள் துறையின் செயலாளராகவும் செயல்படுவார்.

தற்போதைய பாதுகாப்புப் படைத் தளபதி ஜெனரல் அனில் சவுகான் வரும் மே 30, 2026 அன்று தனது பதவிக்காலத்தை நிறைவு செய்ய உள்ளார். 11வது கோர்க்கா ரைபிள்ஸ் பிரிவைச் சேர்ந்த அனில் சவுகான், செப்டம்பர் 30, 2022 முதல் நாட்டின் இரண்டாவது சி.டி.எஸ்ஆகப் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.





தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி, காரிமங்கலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஜக்கசமுத்திரம், ஜிட்டாண்டஅள்ளி, பிக்கனஅள்ளி, கேத்தனஅள்ளி உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் டாக்டர் டி.என்.வி.எஸ்.செந்தில்குமார், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்த கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர் டி.அரியப்பன், காரிமங்கலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் எம்.வி.டி.கோபால், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பி.என்.சி.மகேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர் குட்டி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.



தி.மு.கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உற்ற நண்பரும், கழக உடன்பிறப்புகளின் அன்புக்குரியவருமான மறைந்த அன்பில் பொய்யாமொழி அவர்களின் 72வது பிறந்தநாள் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. இதனையொட்டி, திருச்சி தென்னூரில் உள்ள அவரது இல்லத்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் மாநில கழக இளைஞர் அணி துணைச் செயலாளருமான அன்பில் பொய்யாமொழியின் திருவுருவப் படத்திற்கு, அவரது மகனும் திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மு. மதிவாணன் (மாநகரக் கழகச் செயலாளர்) கே.என். சேகரன் (தலைமைச் செயற்குழு உறுப்பினர்) வண்ணை அரங்கநாதன் (தலைமைச் செயற்குழு உறுப்பினர்) செந்தில் (மாநில அணி அமைப்பாளர்) மேலும், மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர, பகுதி, வட்ட, நகர, ஒன்றிய மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பெருமளவில் கலந்து கொண்டு மரியாதையைச் செலுத்தினர்.

### மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# அன்பில் பொய்யாமொழியின் 72-வது பிறந்தநாள்!

## திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மரியாதை!

திருச்சி, மே 09-

தி.மு.கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உற்ற நண்பரும், கழக உடன்பிறப்புகளின் அன்புக்குரியவருமான மறைந்த அன்பில் பொய்யாமொழி அவர்களின் 72-வது பிறந்தநாள் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதனையொட்டி, திருச்சி தென்னூரில் உள்ள அவரது இல்லத்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மாநில கழக இளைஞர் அணி துணைச் செயலாளருமான அன்பில் பொய்யாமொழியின் திருவுருவப் படத்திற்கு, அவரது மகனும் திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மலர் தூவி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்வில் கழக நிர்வாகிகள் பலர் திரளாகக் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மு. மதிவாணன் (மாநகரக் கழகச் செயலாளர்), கே.என். சேகரன் (தலைமைச் செயற்குழு உறுப்பினர்), வண்ணை அரங்கநாதன் (தலைமைச் செயற்குழு உறுப்பினர்), செந்தில் (மாநில அணி அமைப்பாளர்), மேலும், மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர, பகுதி, வட்ட, நகர, ஒன்றிய மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பெருமளவில் கலந்து கொண்டு மறைந்த தலைவருக்குத் தங்களது மரியாதையைச் செலுத்தினர்.

### ஆந்திராவில் இருந்து

# 500 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய முடிவு!

ஹைதராபாத், மே 10-

ஆந்திர மாநிலத்தில் உள்ள கிரீன்கோ (GREENKO) நிறுவனத்திடமிருந்து 500 மெகாவாட் மின்சாரத்தை கொள்முதல் செய்ய தமிழக மின்சார வாரியம் (TANGEDCO) முடிவு செய்துள்ளது.

ஆந்திரா மாநிலத்தில் கர்னூலில் கிரீன்கோ நிறுவனத்தின் நீரேற்று மின்நிலையம் உள்ளது.

இந்த வகை மின் நிலையங்களில் மின் உற்பத்திக்கு பயன் படுத்தும் தண்ணீர், மிக அதிக திறன் கொண்ட மோட்டர் பம்புகள் மூலம் மேல் அணைக்கு ஏற்றப்படுகிறது.

மேலும் தேவைப்படும் நேரங்களில் நீரை பயன்படுத்தி மீண்டும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

கிரீன்கோ நிறுவனத்தின் இந்த மின் நிலையம் நாளொன்றுக்கு 9 மணி நேரம் மின்சாரம் வழங்கும் திறன் கொண்டுள்ளது.

மே மாதம் முதல் அடுத்து 4 ஆண்டுக்கு கிரீன்கோ நிறுவனத்திடமிருந்து மின்சாரம் வாங்க தமிழக மின்சார வாரியம் (TANGEDCO) முடிவு செய்துள்ள நிலையில் தமிழக மின்சார ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஒரு மெகாவாட்டுக்கு ஆண்டுக்கு ரூ.1.50 கோடி செலுத்தப்பட உள்ளது. இதன் மூலம் கோடை கால மின் தேவையையும், தொழிற் சாலைகள் மற்றும் நகர்ப்புற மின் தேவையையும் சமாளிக்க முடியும் என மின் வாரிய உயர் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

### பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள்!

# 100 சதவீதம் தேர்ச்சி காட்டியுள்ள 2,639 மேல்நிலைப் பள்ளிகள்!

சென்னை, மே 10 -

தமிழகத்தில் கடந்த மார்ச் 2ஆம் தேதி துவங்கி முதல் 26ஆம் தேதி வரை நடைபெற்ற பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த தேர்வில் மாநிலம் முழுவதும் இருந்து சுமார் 8 லட்சம் மாணவ - மாணவிகள் எழுதியிருந்தனர்.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் கடந்த ஏப்ரல் 6 முதல் 20க்குள் முடிக்கப்பட்டு, மதிப்பெண்கள் இணையதளத்தில் பதிவேற்றும் பணிகள் நிறைவடைந்த நிலையில் முடிவுகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த தேர்வில் மொத்தம் 95.2%பேர் தேர்ச்சி பெற்று உள்ளனர்.

வழக்கம் போல் மாணவர்களை விட மாணவிகளே அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவிகள் 97 சதவீதம் பேரும், மாணவர்கள் 93.1 சதவீதம் பேரும் இந்த பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் மொத்தமுள்ள 7,536 மேல்நிலைப் பள்ளிகளில் 2,639 பள்ளிகள் 100% தேர்ச்சியை காட்டி இருக்கின்றன.

இதில் அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் அடங்கும். அதே நேரம் 5,170 பள்ளிகள் 95% தேர்ச்சியை காட்டி இருக்கின்றன.

அதேபோல 100% தேர்ச்சி பெற்ற அரசு மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 489ஆக உள்ளது. 95% தேர்ச்சி பெற்ற அரசு மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,572 ஆகும்.

பள்ளிகள் வகைப்பாடு வாரியான தேர்ச்சி சதவிதம் கீழ் வருமாறு:-

1. அரசுப் பள்ளிகள்- 92.16% தேர்ச்சி

2. அரசு உதவி பெறும் பள்ளிகள் - 96.14% தேர்ச்சி

3. தனியார் சுயநிதிப் பள்ளிகள் - 98.72% தேர்ச்சி

4. இருபாலர் பள்ளிகள் - 95.30% தேர்ச்சி

5. பெண்கள் பள்ளிகள் - 97.08% தேர்ச்சி

6. ஆண்கள் பள்ளிகள் - 90.49% தேர்ச்சி

பெண்கள் பள்ளிகள், ஆண்கள் பள்ளிகளை விட 6.59% சதவீதம் கூடுதலாகவும், இருபாலர் பயிலும் பள்ளிகள் ஆண்கள் பள்ளிகளை விட 4.81% சதவீதம் கூடுதலாக தேர்ச்சி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் ஒரு லட்சம் பள்ளிகளில் மின்சாரம், கழிப்பறை இல்லை!

## நிதி ஆயோக் அறிக்கையில் தகவல்!

புதுடெல்லி, மே 10 -

இந்தியாவில் 1 லட்சம் பள்ளிகளில் மின்சார வசதியும் 98,500 பள்ளிகளில் மாணவிகளுக்கு கழிப்பறை வசதியும் இல்லை என்று நிதி ஆயோக் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘இந்தியாவில் பள்ளிக் கல்வி முறை’ என்ற தலைப்பில் நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

நாட்டில் ஆயிரக்கணக்கான பள்ளிகள் தண்ணீர் வசதி, கழிப்பறைகள், மின்சாரம், ஆய்வகங்கள் மற்றும் ஆசிரியர்கள் இன்றி இயங்கி வருகின்றன. சில பள்ளிகளில் மாணவர்களே இல்லை. மேலும், ஆரம்பக் கல்விக்குப் பிறகு பள்ளிகளில் இருந்து மாணவர்கள் பாதியில் விலகும் விகிதம் பல மாநிலங்களில் ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. இவை அனைத்துக்கும் மேலாக, அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களில் 1015 சதவீதத்தினர் மட்டுமே அவர்கள் கற்பிக்கும் பாடத்தில் 60 சதவீதத்துக்கும் அதிகமான மதிப்பெண்களைப் பெற முடிகிறது.

குறிப்பாக, நாடு முழுவதும் 98,592 பள்ளிகளில் உள்ள பெண்களுக்கான கழிப்பறைகள் செயல்பாட்டு நிலையில் இல்லை. 61,540 பள்ளிகளில் கழிப்பறைகளே இல்லை. அதேபோல், கடந்த 10 ஆண்டுகளில் பள்ளிகளுக்கான மின்சார வசதி 55ல் இருந்து 91.9% ஆக உயர்ந்துள்ளது. எனினும், 1.19 லட்சம் பள்ளிகள் இன்னும் மின்சார வசதி இன்றி உள்ளன.

மேலும், 14,505 பள்ளிகளில் தண்ணீர் வசதி இல்லை. இதற்கிடையில், 59,829 பள்ளிகளில் கை கழுவும் வசதிகள் இல்லை. அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 51.7% மட்டுமே அறிவியல் ஆய்வகங்களைக் கொண்டுள்ளன. நாட்டில் 1,04,125 பள்ளிகள் ஒரே ஒரு ஆசிரியருடன் இயங்கி வருகின்றன. இந்தப் பள்ளிகளில் சுமார் 89% கிராமப் புறங்களில் அமைந்துள்ளன.

இந்தியா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 4.6 சதவீதத்தை மட்டுமே கல்விக்காகச் செலவிடுகிறது. இது இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் சுமார் 5.9% ஆகவும், ஜெர்மனி மற்றும் பிரான்ஸில் சுமார் 5.4% ஆகவும் உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.